Proceedings of

# Two Day National Workshop For Farmers

On the

# "Modern Trends in the Production of Biomanures"

19th, 20th March 2010

விவசாயிகளுக்கான

இரண்டு நாள் தேசியப் பயிலரங்கம்

# இயற்கை உயிரி உரங்கள் தயாரிப்பில் நவீன முறைகள்

19, 20 மார்ச் 2010

**Sponsored By**
Ministry of Earth Sciences,
*Government of India,*
*New Delhi.*

**Organised By**
**Department of Chemistry**

PERIYAR MANIAMMAI UNIVERSITY
Under Sec. 3 of UGC Act, 1956

NACC ACCREDITED

## “உரம் தயாரித்தலில் பாரம்பரிய மருத்துவ நெறியும், மூலிகை வீரிய உரம் பற்றிய ஆய்வும்”

*டாக்டர்.வே.கணபதி,திட்ட ஒருங்கிணைப்பாளர் & சித்த மருத்துவ ஆய்வாளர்,*
*விவேகானந்த கேந்திரம்,இயற்கை வள அபிவிருத்தித் திட்டம்,கன்னியாகுமரி.*

உலக அரங்கில் ஆரோக்கியம் காப்பதில் பாரம்பரிய மருத்துவத்தின் பங்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஏறத்தாழ 80 சதவீதமான மக்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் பாரம்பரிய மருத்துவத்தை நம்பி உள்ளார்கள். இந்தியாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே நம்முடைய கலாச்சாரத்தோடு சுற்றுச்சூழலோடு இணைந்த பாரம்பரிய மருத்துவம் மற்ற நாடுகளுக்கு முன்னுதாரணமாக உள்ளது.

நம் பாரம்பரிய மருத்துவம் மனிதர்களுக்கு மட்டுமில்லாது கால்நடைகளுக்கும், இதர ஜீவராசிகளுக்கும் விவரமாக கூறி இருப்பது ஒருபக்கம் இருந்தாலும் மூலிகைகளுக்கு மூலிகைகளை கொண்டே மருத்துவம் செய்யும் நேர்த்தியும் இருப்பது அருட்கொடை. சுற்றுச்சூழலை மேம்படுத்தும் உத்தி, குறிப்பாக மண்வளங்கள், நீர்வளங்களை மேம்படுத்தி பயிர்செய்யும் உணவுப்பயிர் முதல் மூலிகைப் பயிர்கள்வரை (விவசாயம் செய்வது பற்றி) தெளிவாக்கி உள்ளனர். இயற்கை விவசாயத்தில் பாரம்பரிய முறையின் பங்கு உன்னதமானது. செடிவகைகளை வளர்க்கும் விதம், உரங்கள் தயாரிக்கும் முறை குறிப்பாக மூலிகை உரங்கள் தயாரிக்கும் முறை, பஞ்சகவ்யா ஆகியவற்றின் விளக்கங்கள் அளப்பரியன.

### பாரம்பரிய மருத்துவ நெறிப்படி பயிர்செய்வதின் நோக்கம்:

1. மண், நீர் வளத்தையும், பயிர் வளத்தையும் மேம்படுத்துதல்
2. மண், நீர், பயிர் வளங்களை பாதுகாத்தல்
3. இயற்கை வாழ்வு வாழ்தல்

### மண்ணின் சுற்றுச்சூழல்:

மண்ணின் சுற்றுச்சூழலைக் கொண்டு நோய்கணிக்கவும், உயிரினங்களை பாதுகாக்கவும் கூறப்பட்டுள்ளது. மூலிகைகள் முதல் தாதுஉப்புக்கள், அனைத்து ஜீவராசிகளும் அடங்கும்.

### பாரம்பரிய மருத்துவ முறைப்படி 'பயிர்' (மூலிகைகள்):

உலகில் காணும் அனைத்து தாவர வர்க்கங்களும் மூலிகைகளே. ஒவ்வொன்றும் மருத்துவக்குணம் கொண்டது. அனைத்தும் மருந்தாகவோ, உணவாகவோ, பிறவழிகளிலோ பயன்படக்கூடியது. தொல்காப்பியர் கூறும் உயிர்களின் தோற்றத்தில் முதலாவதாகக் கூறப்பட்டுள்ள ஓரறிவு கொண்ட பயிர்களே அடுத்தடுத்து வரும் உயிர்களுக்கு ஆதாரமாக

உள்ளன என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் எடுத்துக்காட்டும்.

**பயிர் வகைகள்:**

பில், பூண்டு (கிழங்கு), செடி, கொடி, மரம் என ஐந்து நிலைகளாகவும், விருட்சமாகவும் பிரித்து கூறி இருப்பது நாம் அறியவேண்டியது.

**பயிர்களின் பிணிகள்:**

பொதுவாக பயிர்களில் நோய்கள்

1. வாதக்குற்றத்தால்
2. பித்தக்குற்றத்தால்
3. கபக்குற்றத்தால்
4. முக்குற்றத்தால் ஏற்படும்.

**பயிர்களின் இயல்பு நிலையை மாற்றல்:**

1. ஒரு பயிரின் இயல்பான அமைப்பு, உருவம், அதன் பூ, காய்க்கும் விதம், நிறம், மணம் ஆகியவைகளை வழக்கத்திற்கு மாறாக பாரம்பரிய சிறப்பு உத்தியை பயன்படுத்தி மாற்றம் ஏற்படுத்துதல். இதிலும் குறிப்பாக பயிரின் ஒரு குறிப்பிட்ட பாகத்தையோ, அல்லது முழு உருவத்தையோ மாற்றுதல்.
2. பயிரின் இயல்பான செயல்படு தன்மை (அ) வேகத்தை குறிப்பிட்ட பாரம்பரிய உத்தியின் மூலம் மாற்றுதல். அதிக வேகத்துடனோ (அ) குறைவாகவோ குறிப்பிட்ட பயிரின் குறிப்பிட்ட பாகத்தையோ (அ) முழுசெயலையுமோ மாற்றுதல்.
3. பயிரை நோய்கள் தாக்காது. பாதுகாக்கும் வகையில் காயகற்பத் தன்மையாக்குதல்.

**பாரம்பரிய மருத்துவநெறியில் விலங்குகள்:**

விலங்குகளின் கழிவுகளான சிறுநீர், சாணம் ஆகியனவும் அவைகள் தரும் பால்படுபொருட்களும் மருத்துவ ரீதியில் மிக உன்னதமானதாகும். தற்காலத்தில் எல்லோராலும் கையாளப்பட்டு வரும் 'பஞ்சகவ்யா' பயிர்பாதுகாப்பிலும், நுண்ணூட்டச் சத்து தருவதிலும் மிக முக்கியப்பங்கு வகிக்கிறது. பஞ்சகவ்யாவை பயிர்களின் காயகற்பம் என்று ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. பஞ்சகவ்யாவிற்கு சிறுநீர், சாணம், நெய், தயிர் உள்ளிட்டவைகள் மிக மையப்பொருட்கள்.

**பயிர் வளர்ப்பின் பாரம்பரிய மருத்துவம் கூறும் காயகற்ப நிலைகள்:**

1. சுற்றுச்சூழலுக்குத் தக்க காலநிலைப்படி மேற்கொள்ளப்படும் உத்திகள்
2. குறிப்பிட்ட மூலிகை உள்ளிட்ட பொருட்களை பயன்படுத்துதல்
3. புனிதமாக செயல்படுமுறைகளை கையாளுதல் (ஹோலிஸ்டிக் அப்ளிகேசன்ஸ்)

**பாரம்பரிய மருத்துவ முறையில் 'உரம்'**

பாரம்பரிய மருத்துவ முறையில் பல்வேறு விதமாக உரம் தயாரிக்கும் முறைகள் கூறப்பட்டுள்ளன. இவ்வகை உரங்கள் பயிர்களை பாதுகாக்கவும், நுண்ணூட்டச்சத்துக்கள் தந்து வளர்ப்பதிலும் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. பயிர் வளர்க்க உதவும் உரங்கள், பாதுகாப்புக்கான உரங்கள் என்று தனித்தனியாக கூறாமல் இரண்டும் ஒரே விதத்தில் பயன்படும் வகையில் கூறிஇருப்பது இதன் சிறப்பு. உரம் தயாரிப்பில் மூலிகைகள், தாதுக்கள், உப்புக்கள், ஜீவபொருட்கள் அத்துடன் சில மந்திர உச்சாடணங்களும் கூறப்பட்டுள்ளன.

**உரம் தயாரிக்க பயன்படும் சில முக்கிய மூலிகைகள்:**

| | |
|---|---|
| 1. எருக்கு | 2. வேம்பு |
| 3. சீதா | 4. நொச்சி |
| 5. கடுக்காய் | 6. சேங்கொட்டை |
| 7. பூண்டு | 8. கரிசாலை |
| 9. ஆவரை | 10. கொளுஞ்சி |
| 11. கரந்தை | 12. புங்கு |
| 13. கறிவேப்பிலை | 14. அகத்தி |
| 15. பூவரசு | 16. அரசு |
| 17. ஆல் | 18. நாவல் |
| 19. அவுரி | 20. தழுதாழை |
| 21. கருங்காலி | 22. மருது |
| 23. தொட்டால்வாடி | 24. சங்கன்குப்பி |
| 25. ஆகாசத்தாமரை | 26. கொன்றை |
| 27. வாகை | 28. உளுந்து |
| 29. கடலை வகை | 30. மா |
| 31. புளி | 32. துளசி |
| 33. மஞ்சள் | 34. கரும்பு |
| 35. இலுப்பை | 36. நீரடிமுத்து |
| 37. நாயுருவி | 38. அரளி |

**உரம் தயாரிக்க பயனாகும் சில முக்கிய இயற்கை தாதுக்கள்**

| | |
|---|---|
| 1. நவசாரம் | 2. படிகாரம் |
| 3. உவர்மண் | 4. வெங்காரம் |
| 5. நீற்றிய சுண்ணாம்பு | 6. சிப்பிகளின் தூள், நத்தை ஓடு |

7. பாறையுப்பு

மற்றும் சில ஜீவராசிகளின் எலும்பு, கொம்பு, கால்குளம்பு, மயிர், தோல் உள்ளிட்ட அனைத்துப் பாகங்களும் (உ.ம்) குதிரை, பன்றி, நாய், பறவைகள், வௌவால், புறா, பசு, எருமை உள்ளிட்டவைகள்.

**மூலிகை வீரிய உரம் பற்றிய ஆய்வு**

சித்தர்கள் வழங்கிய தனிச்சிறப்புமிக்க உரம்தான் மூலிகை கருப்பேற்ற தயாரிக்கும் உரமாகும். மாமுனி போகர் எழுதிய நூலில் இதற்கான விரிவான விளக்கம் கூறப்பட்டுள்ளது.

வீரிய மூலிகை மருந்துகளை பெறவேண்டியும், இரசவாத சித்தியும், காயசித்தியும் பெறவேண்டி சித்தர்கள் சாதாரணமாக வழக்கில் காணும் மூலிகைகளுக்கு வீரியம் அளிக்கும் வகையில், அதன் நிற, குணங்களை மாற்றும் பொருட்டு மூலிகைகளை கொண்டு உரம் தயாரித்து அதில் குறிப்பிட்ட மூலிகைகளை வளர்த்து பயன்பெற்றனர். இம்மூலிகைகள் எந்தவித கிருமிகளாலும் தாக்குதல் பெறாது தீரா - அசாத்திய நோய்களையும் தீர்க்கவல்லது என்று நூற்களில் கூறக்கிடக்கின்றன (உ.ம்) கருவல்லாரை, கருநீலி, கருநெல்லி, கருந்துளசி, கருநொச்சி.

கருப்பு நிறமாக்கப்பட்ட மூலிகைகள் அதிக வீரியத் தன்மை உடையது என்பதை சித்தர்கள் காட்டுகிற முறை ஆகும்.

**மூலிகை வீரிய உரம் தயார் செய்யும் முறை**

சுத்தமான சேங்கொட்டையை மிகக்கவனமாக துண்டுதுண்டாக வெட்டி அதற்குரிய அளவுப்படி மண்ணோடு கலந்து தினமும் நீர் ஊற்றி வரவேண்டும். (சேங்கொட்டையின் பால் நச்சுத்தன்மை உடையது) மண் காய்ந்து விடாமல் தொடர்ந்து 3 மாதம் நீருற்றி வரும்பொழுது மூலிகையானது மண்ணோடு மக்கி கருப்புநிற மண்ணாக வரும். அங்ஙனம் 3 முதல் 6 மாதத்திற்கு சரிவர கரிமண்ணாக வரலில்லையெனின் திரும்ப திரும்ப மேற்கூறியபடி செய்ய வேண்டும். இவ்வாறு மூலிகை வீரிய உரம் முறைப்படி தயாரித்து அதில் குறிப்பிட்ட மூலிகை வகைகளை வளர்க்கப்படும்போது முதல்முறை சாகுபடியில் கால்பங்கு கருநிற மூலிகைகளைப் பெறலாம். இங்ஙனம் தொடர்ந்து 2 அல்லது 3 முறை மூலிகை வளர்க்கப்படும்போது வீரியமிக்க கரியநிற மூலிகைகளைப் பெறலாம். மேற்கூறிய மூலிகை உரத்தில் சேங்கொட்டையை வெட்டி போடாதபோது சற்று காலதாமதமாக மூலிகை உரம் முழுமை பெற்று கிடைக்கும்.

**இவ்வுரத்தின் மூலம் வளர்க்க அறிவுறுத்தப்படும் மூலிகைகள்**

1. நீலி
2. கரிசாலை
3. கரந்தை
4. மஞ்சள் கரிசாலை
5. வல்லாரை
6. செருப்படை
7. குமரி
8. நிலப்பனை

9. கொல்லங்கோவை
10. குப்பைமேனி
11. வீழி
12. சிவனார்வேம்பு
13. கொடிவேலி
14. துளசி
15. நெல்லி
16. ஊமத்தை
17. நொச்சி
18. மணத்தக்காளி
19. கடுக்காய்
20. வேம்பு

பாரம்பரிய சித்த மருத்துவத்தில் கருமை நிற மூலிகைகளுக்கு தனி மகத்துவம் தரப்படுகிறது.

**வருவாயை பெருக்கும் உத்திகள்**

1. வீரிய உரத்தின் தனித்தன்மை பூச்சிக் கிருமியை வரவிடாது தடுத்து மூலிகைகளுக்கு வீரியத்தை தரக்கூடியது. எனவே மூலிகை உரத்தை தயார் செய்து மண்புழு உரம்போல் விற்பனை செய்யலாம்.
2. உரத்தில் வளர்க்கப்பட்டு சற்று வீரியமாக்கப்பட்ட மூலிகைக் கன்றுகளை உற்பத்தி செய்து அதன்மூலம் வருமானம் பெறலாம்.
3. வீரியமிக்க மூலிகைகளை வளர்த்து அதை மருந்துகளாக்கி வீரியமிக்க மருந்தாக விற்பனை செய்யலாம்.



சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (1031)

காடு ஆக ஒன்றோ நாடு ஆக ஒன்றோ
அவல் ஆக ஒன்றோ மிசை ஆக ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே..

இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும் (1040)

Rs. 100.00